## இனிமையான குழந்தைகளே! இப்போது நீங்கள் சாந்தி மற்றும் சுகத்தின் சிகரத்திற்குச் (டவர்) செல்ல வேண்டும். அதனால் தன்னுடைய சுபாவம் மற்றும் பண்புகளைச் (நடத்தையை) சீர்திருத்திக் கொண்டே செல்லுங்கள். பழையதை மாற்றம் செய்யுங்கள்.

கேள்வி: புத்தி சதா புத்துணர்ச்சியுடன் இருப்பதற்கான யுக்தி எது?

பதில்: பாபா என்ன சொல்கிறாரோ, அதை சிந்தனை செய்யுங்கள். விசார் சாகர் மந்தன் (ஞானக் கடலை ஆழமாக சிந்தனை) செய்வதால் புத்தி சதா புத்துணர்ச்சியுள்ளதாக ஆகி விடும். யார் சதா புத்துணர்ச்சியுடன் இருக்கிறார்களோ, அவர்கள் மற்றவர்களுக்கும் சேவை செய்ய முடியும். அவர்களின் (பேட்டரி) சக்தி சதா சார்ஜ் (நிரப்பிக்) கொண்டே இருக்கும். ஏனென்றால் விசார் சாகர் மந்தன் செய்வதால் சர்வசக்திவான் தந்தையுடன் தொடர்பு இணைக்கப்பட்டதாக உள்ளது.

பாடல்: கண்ணில்லாதவர்களுக்கு வழி காட்டுங்கள்.........

ஓம் சாந்தி. இந்தப் பாடலும் கூட மனிதர்களால் பாடப்பட்டதாகும். ஆனால் அர்த்தம் எதுவும் புரிந்து கொள்ளவில்லை. எப்படி மற்றப் பிரார்த்தனைகளைச் செய்கின்றனரோ, அதுபோல் இதுவும் ஒரு பிரார்த்தனையாகும். பரமாத்மாவை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. பரமாத்மாவை அறிந்திருந்தால் அனைத்தையுமே அறிந்திருப்பார்கள். வெறுமனே பரமாத்மா எனச் சொல்லி விடு கின்றனர், ஆனால் அவரது வாழ்க்கை (வரலாறு) பற்றி எதுவுமே தெரியாது. ஆக, கண்ணில்லாதவர் ஆகின்றனர் அல்லவா? உங்களுக்கு இப்போது ஞானத்தின் மூன்றாவது கண் கிடைத்துள்ளது. அதனால் நீங்கள் திரிநேத்ரி எனச் சொல்லப்படுகிறீர்கள். உலகத்தில் இந்த வார்த்தையைச் சொல்கின்றனர், திரிநேத்ரி, திரிகாலதரிசி, திரிமூர்த்தி.......... ஆனால் அர்த்தம் எதுவுமே தெரியாது. எப்படி கேட்கின்றனர், சயின்ஸ் மற்றும் சைலென்ஸ் இவற்றிற்கிடையே என்ன சம்மந்தம் என்று. கேள்வி கேட்கின்றனர். பதில் அவர்களுக்கே தெரியாது. உலகத்தில் அமைதி நிலவ வேண்டும் என்கின்றனர். ஆனால் அது எப்போதாவது இருந்ததா? அமைதியை யார் உருவாக்கினார்கள்? எதுவுமே தெரியாது. வெறுமனே கேட்டுக் கொண்டே இருக்கின்றனர் என்றால் நிச்சயமாக அது பற்றித் தெரிந்தவர்கள் யாராவது வேண்டும், பதில் சொல்வதற்கு. குழந்தைகளாகிய உங்களுக்கு பாபா சொல்லியிருக்கிறார், இவை அனைத்தும் உருவாக்கப் பட்ட விளையாட்டு என்று. டவர் ஆஃப் பீஸ், சுகத்தின் டவர், அனைத்துக்கும் டவர் உள்ளது. சாந்தியின் டவர் மூலவதன். அங்கே தான் ஆத்மாக்கள் நாம் வசிக்கிறோம். அது டவர் ஆஃப் சைலன்ஸ் எனப்படும். பிறகு சத்யுகத்தில் உள்ளது, டவர் ஆஃப் சுகம், டவர் ஆஃப் பீஸ், பிராஸ்பரிட்டி. இதுபோல் யாரும் வாயினால் சொல்ல மாட்டார்கள்-ஆத்மாக்களாகிய நமது வீடு முக்திதாமம் என்று. இந்த அனைத்து விஷயங்களையும் பாபா தான் புரிய வைக்கிறார். ஆசிரியர் என்றால் இப்படி இருக்க வேண்டும். அவர் டவர் ஆஃப் நாலேட்ஜ். உங்களையும் சாந்தி மற்றும் சுகத்தின் டவருக்கு அழைத்துச் செல்கிறார். இது பிறகு டவர் ஆஃப் துக்கதாமம். ஒவ்வொரு விஷயத்திலும் இன்சால்வன்ட்டாக (அனைத்தையும் இழந்தவராக) உள்ளனர். தூய்மை, சுகம், சாந்தியின் ஆஸ்தியை நீங்கள் இச்சமயம் தான் பெறுகிறீர்கள். மகிமை எல்லாம் இந்தப் புருஷோத்தம சங்கமயுகத்துக்குத் தான். இது கல்யாண்காரி யுகம் எனச்

சொல்லப்படுகின்றது. கலியுகத்துக்குப் பிறகு சத்யுகம். அது சுகத்தின் டவர். அது (மேலே இருப்பது) சாந்தியின் டவர். இங்கே இருப்பது துக்கத்தின் டவர். இங்கே அளவற்ற துக்கம். அனைத்து துக்கங்களும் வந்து ஒன்றாகச் சேர்ந்துள்ளன. சொல்கின்றனர் இல்லையா, துக்கத்தின் மலைகள் விழுகின்றன என்று? நிலநடுக்கம் முதலியன ஏற்பட்டால் எவ்வளவு ஐயோ-ஐயோ எனக் கூக்குரலிடுகின்றனர்!

பாபா புரிய வைத்துள்ளார், மீதி குறைவான கால அவகாசமே உள்ளது. குழந்தைகளுக்கு நினைவு யாத்திரையில் நேரம் பிடிக்கின்றது. அநேகர் இதை முழுமையாகப் புரிந்து கொள்வதே இல்லை. பிந்தியைப் புரிந்து கொள்வார்களா? என்ன புரிந்து கொள்வார்கள்? அட, எப்படி ஆத்மாவோ அப்படியே பரமாத்மாவும் இருக்கிறார். ஆத்மாவை அறிவீர்கள் இல்லையா? அது அதிர்ஷ்ட நட்சத்திரம். முற்றிலும் சூட்சுமமானது. இந்தக் கண்களால் பார்க்க முடியாது. ஆக, இந்த அனைத்து விஷயங் களையும் பாபா புரிய வைக்கிறார். இத்தகைய விஷயங்கள் பற்றி விசார் சாகர் மந்தன் செய்வ தாலும் புத்தி புத்துணர்ச்சி பெறும். எங்கே சென்றாலும் சொல்லிப் புரிய வைப்பீர்கள், டவர் ஆஃப் சாந்தி, டவர் ஆஃப் சுகம், டவர் ஆஃப் பவித்திரத்தா இருப்பதே புது உலகத்தில் தான். பழைய சுபாவங்களை, பண்புகளை சீர்திருத்தி பாபா புது உலகத்தின் எஜமான் ஆக்குகிறார். மனிதர்கள் பாடுகின்றனர், வேத சாஸ்திரங்கள், கீதை முதலியவற்றைப் படிக்கின்றனர் என்றாலும் எதையும் புரிந்து கொள்வதில்லை. ஏணிப்படியிலோ கீழே இறங்கியே வருகின்றனர். தங்களை சாஸ்திரங் களின் அத்தாரிட்டி என்று நினைக்கின்றனர் என்றாலும் கூட அவர்கள் கீழே இறங்கியே ஆக வேண்டும். ஆத்மா முதலில் அனைவருக்கும் சதோபிரதானமாக உள்ளது. பிறகு கொஞ்சம்-கொஞ்சமாக பேட்டரி (சக்தி) தீர்ந்து போகின்றது. இப்போது மீண்டும் பேட்டரி சார்ஜ் ஆகின்றது. பாபா சொல்கிறார் - மன்மனாபவ. தன்னை ஆத்மா என உணருங்கள். பாபா சர்வசக்திவான். அவரை நினைப்பதால் பாவங்கள் நீங்கும். மேலும் பேட்டரி நிரம்பி விடும். நீங்கள் இப்போது உணர்ந்து பார்க்கிறீர்கள், இப்போது நமது பேட்டரி நிரம்பிக் கொண்டிருக்கிறது என்பதை, சிலருக்கு நிரம்பாமலும் உள்ளது. சீர்திருந்துவதற்கு பதில் மேலும் கெட்டுப் போய் விடுகின்றனர். பாபாவிடம் உறுதிமொழியும் கொடுக்கின்றனர் - பாபா, இனி ஒரு போதும் விகாரத்தில் போக மாட்டேன். உங்களிடம் இருந்து 21 பிறவிகளுக்கான ஆஸ்தியை நிச்சயமாக அடைவோம். பிறகும் கீழே விழுந்து விடுகின்றனர். பாபா சொல்கிறார், காம விகாரத்தை வெற்றி கொள்வதன் மூலம் நீங்கள் உலகத்தை வெற்றி கொள்வீர்கள். பிறகு விகாரத்தில் சென்றீர்கள் என்றால் புத்தி அவ்வளவு தான், மூடிக்கொண்டு விடும். இந்தக் காமம் மிகப்பெரிய விரோதியாகும். ஒருவர் மற்றவரைப் பார்ப்பதால் காமத்தின் நெருப்புப் பற்றிக் கொள்கின்றது. பாபா சொல்கிறார், நீங்கள் காம சிதையில் அமர்ந்து கருப்பாகி விட்டிருக்கிறீர்கள். இப்போது உங்களை வெள்ளையாக ஆக்குகிறேன். இதை பாபா தான் குழந்தைகளாகிய உங்களுக்குச் சொல்லிப் புரிய வைக்கிறார். படிப்பினால் உங்களுடைய புத்தி திறந்து கொள்கிறது. விருட்சத்தின் வர்ணனையும் செய்கின்றனர். இது கல்ப விருட்சமாகும். மனித சிருஷ்டியின் பன்முக மரம். இது தலைகீழான மரம் எனவும் சொல்லப்படு கின்றது. எத்தனை விதமான தர்மங்கள்! இத்தனைக் கோடி ஆத்மாக்களுக்கு அழியாத பாகம் இந்நாடகத்தில் கிடைத்துள்ளது. இருவருக்கு ஒரே மாதிரியான பாகம் இருக்க முடியாது. இப்போது உங்களுக்கு ஞானத்தின் மூன்றாவது கண்

கிடைத்துள்ளது. சிந்தனை செய்து பாருங்கள், எவ்வளவு ஏராளமான ஆத்மாக்கள்! எப்படி மீன்களின் பொம்மை ஒன்று உள்ளது, நூ-ல் இதுபோல் கீழே இறங்குகிறது. இதுவும் அது போன்றது தான். நாமும் கூட டிராமாவின் கயிற்றில் கட்டப்பட்டிருக் கிறோம். இப்படியே இறங்கி-இறங்கியே கல்பம் முடிவடைந்துள்ளது. பிறகு நாம் மேலே செல்கிறோம். இந்த ஞானமும் குழந்தைகளுக்கு இப்போது கிடைத்துள்ளது. மேலிருந்து ஆத்மாக் கள் வருகின்றனர், நம்பர்வார் கூடிக்கொண்டே போகின்றனர். இந்த விளையாட்டில் நீங்கள் பாகமேற்று நடிப்பவர்களாக இருக்கிறீர்கள். முக்கியமாக படைப்பவர், இயக்குநர், நடிகர் உள்ளனர் இல்லையா? முக்கிய மானவரோ சிவபாபா. அதன் பிறகு எந்த நடிகர்கள்? பிரம்மா, விஷ்ணு, சங்கர். பக்தி மார்க்கத்தினர் அநேக சித்திரங்களை உருவாக்கியுள்ளனர். ஆனால் அர்த்தம் எதுவும் தெரியாது. லட்சம் வருடங்கள் எனச் சொல்லி விடுகின்றனர். இப்போது பாபா வந்து ஞானம் முழுவதையும் தருகிறார். இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், சத்யுகத்தில் இந்த ஞானம் நமக்கு இருக்காது. எப்படி இங்கே விவகாரங்கள் நடைபெறுகின்றனவோ, அதுபோல் அங்கே தூய்மை, சுகம், சாந்தியின் இராஜ்யம் நடைபெறும். பாபாவும் அற்புதமானவர் - இவ்வளவு மிகச்சிறிய புள்ளியாக இருக்கிறார். எப்படி உங்களுடைய ஆத்மாவோ, அதுபோல் இவருடைய (பிரம்மாவின்) ஆத்மா பாபாவிடமிருந்து ஞானம் முழுவதையும் பெற்றுக் கொண்டிருக்கிறது. பாபா பிறகு பெரிய உருவமுள்ளவராக இருக்க மாட்டார். அவரும் புள்ளியாகவே இருக்கிறார். புள்ளியாக இருக்கும் உங்கள் ஆத்மாவினுள் ஞானம் முழுவதும் தாரணையாகிக் கொண்டிருக்கிறது. இந்த ஞானத்தைக் கல்பத்திற்குப் பின் பாபா மறுபடியும் தருவார். எப்படி ரிக்கார்டு நிரம்பியிருக்கிறது என்றால் பிறகு ரிபீட் ஆகிறது இல்லையா? ஆத்மாவிலும் கூட நடிப்பின் பாகம் முழுவதும் நிரம்பியுள்ளது. ஏதேனும் மிக அற்புதமான விஷயம் இருக்கிறதென்றால் அது இறைவன் செயல் (அல்லது இயற்கையின் சக்தி) எனச் சொல்லப்படுகின்றது இல்லையா? இந்த அனாதி டிராமாவின் பாகத்திலிருந்து ஒருவரும் விடுபட முடியாது. அனைவரும் தங்கள் பாகத்தை நடித்தேயாக வேண்டும். இவை மிக அற்புதமான விஷயங்கள். இவற்றை நன்கு புரிந்து தாரணை செய்தால் குஷியின் அளவு அதிகரிக்கும். உங்களுக்கு எவ்வளவு ஸ்காலர்ஷிப் (உதவி) கிடைக்கின்றது! ஆகவே புருஷார்த்தம் நல்லபடியாகச் செய்ய வேண்டும். தன்னைப்போல் மற்றவர்களை ஆக்க வேண்டும். நீங்கள் அனைவரும் ஆசிரியர்கள். ஆசிரியர் உங்களுக்குப் படிப்பு சொல்லித் தந்து தமக்கு சமமாக ஆசிரியராக ஆக்குகிறார். குருவாக ஆகவேண்டும் என்பதில்லை. நீங்கள் ஆசிரியராகிறீர்கள், ஏனென்றால் இராஜயோகம் கற்றுத் தருகிறீர்கள், பிறகு சென்று விடுவீர்கள். இதையும் நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். அவர்களோ இதை அறிந்திருக்கவில்லை. அவர் களால் சத்கதி அளிக்கவும் முடியாது. அனைவருக்கும் சத்கதி அளிப்பவர் ஒரே ஒரு தந்தை தான் இல்லையா? லிபரேட்டர் (விடுவிப்பவர்), கைடு (வழிகாட்டி) கூட அவர் தான். நீங்கள் எப்போது அங்கிருந்து வருகிறீர்களோ, அப்போது பாபா வழிகாட்டியாகி வருவதில்லை. பாபா வழிகாட்டியாக இப்போது தான் ஆகிறார். நீங்கள் எப்போது வீட்டிலிருந்து வருகிறீர்களோ, பிறகு வீட்டையே மறந்து விடுகிறீர்கள். இப்போது நீங்களும் கூட (கைடு) வழிகாட்டியாக இருக்கிறீர்கள். அனைவருக்கும் வழி சொல்கிறீர்கள். அசரீரி பவ. உங்கள் பெயர் பாண்டவ சேனை என்றும் உள்ளது. சரீரதாரியாகவோ இருக்கிறீர்கள் தான் இல்லையா? எப்போது தனியாக இருக்கிறீர்களோ, அப்போது சேனை என்று சொல்ல

முடியாது. சரீரத்துடன் கூட எப்போது மாயா மீது வெற்றி கொள்கிறீர் களோ, அப்போது உங்களை சேனை எனச் சொல்கின்றனர். அவர்கள் பிறகு சண்டையின் விஷயங் களை எழுதியுள்ளனர். இது எல்லையற்ற விஷயமாகும். அவர்கள் மகாநாடு முதலியவற்றை நடத்துகின்றனர். சம்ஸ்கிருதம் முதலியவற்றின் கல்லூரிகளைத் திறக்கின்றனர். எவ்வளவு செலவு செய்கின்றனர்! செலவு செய்து-செய்தே காலியாக்கி விடுகின்றனர். வெள்ளி, தங்கம், வைரம் அனைத்துமே காலியாகி விட்டன. பிறகு உங்களுக்காக அனைத்துமே புதிதாக வெளிப்படும். ஆக, குழந்தைகளாகிய உங்களுக்கு நடமாடும்போதும் சுற்றிவரும் போதும் மிகுந்த குஷி இருக்க வேண்டும். பாபாவையும் ஆஸ்தியையும் நினைவு செய்ய வேண்டும். உங்களுடைய பாகம் நடை பெற்றுக் கொண்டே உள்ளது. ஒருபோதும் நிற்காது. பாபா புரிய வைக்கிறார் - நீங்கள் உங்களுடைய பிறவிகள் பற்றி அறிந்திருக்கவில்லை. 84 பிறவிகளின் கணக்கு-வழக்கையும் முதல்-முதலில் வருகிற இவருக்குச் சொல்கிறார். குழந்தைகளாகிய உங்களுக்கு அளவற்ற சுகம் கிடைக்கின்றது. டவர் ஆ ஃப் ஹெல்த், வெல்த், ஹேப்பினஸ்....... (ஆரோக்கியம், செல்வம், மகிழ்ச்சி). அப்படியானால் எவ்வளவு நஷா இருக்க வேண்டும்! பாபா நமக்கு எல்லையற்ற ஆஸ்தி தருகிறார். எவ்வளவு நீங்கள் அருகில் வந்து கொண்டே இருப்பீர்களோ, அவ்வளவு ஆபத்துகளும் வந்து கொண்டே இருக்கும். விருட்சத்தின் வளர்ச்சி ஏற்படும். விருட்சங்கள் பலவீனமாக இருந்தால் புயலடிக்கும் போது விழுந்து விடும். இதுவோ நடக்கத் தான் செய்யும். உங்களுடைய நோக்கம் மற்றும் குறிக்கோளின் சித்திரம் (லட்சுமி-நாராயணன்) முன்னால் உள்ளது. நீங்கள் வேறு எந்த ஒரு சித்திரமும் வைக்க முடியாது. பக்தி மார்க்கத்தில் மனிதர்கள் ஏராளமான சித்திரங்களை வைக்கின்றனர். ஞான மார்க்கத்தில் ஒன்று தான். அதுவும் ஞானம் புத்தியில் உள்ளது. மற்றப்படி பிந்தியின் சித்திரம் என்ன வெளிப்படுத்துவது? ஆத்மாவோ நட்சத்திரம் இல்லையா? இதுவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களாகும். ஆத்மாவையோ இந்தக் கண்களால் பார்க்க முடியாது. அநேகர் கேட்கின்றனர், பாபா, எங்களுக்கு சாட்சாத்காரம் கிடைக்க வேண்டும், நாங்கள் வைகுண்டத்தைப் பார்க்க வேண்டும் என்று. ஆனால் பார்ப்பதால் எஜமானர் ஆகிவிட மாட்டார்கள். மனிதர்கள் சொல்கின்றனர், இன்னார் சொர்க்கத்திற்குச் சென்று விட்டார் என்று. ஆனால் சொர்க்கம் எங்கே உள்ளது என்று அவர்களுக்குத் தெரியாது. எந்த ஆத்மாக்கள் சொர்க்கத்திற்குச் சென்றிருக் கிறார்களோ, அவர்கள் தான் சொல்வார்கள். ஆத்மாவையோ அனைவரும் நினைவு வைத்துள்ளனர் இல்லையா? இப்போது உங்களுக்கு உயர்ந்தவரிலும் உயர்ந்தவராகிய பாபா படிப்பு சொல்லித் தந்து கொண்டிருக்கிறார். அதன் மூலம் நீங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த பதவி பெற்றுக் கொண்டிருக் கிறீர்கள். நம்பர்வார் புருஷார்த்தத்தின் அனுசாரம் நரனிலிருந்து நாராயணன் ஆக நிச்சயம் ஆவீர்கள்.

சாந்தி வேண்டும் எனக் கேட்பவர்களுக்கு நீங்கள் புரிய வைக்க வேண்டியது கடமையாகும். அநேகர் புரிந்து கொண்டும் உள்ளனர், இவர் சொல்வது மிகச் சரியானது தான் என்று. அந்தச் சமயமும் வரும். எழுதப்பட்டுள்ளது, குமாரிகள் மூலம் பீஷ்ம பிதாமகர் போன்றவர்கள் மீது ஞான பாணம் எய்தப்பட்டது என்று. மற்றப்படி அர்ஜுனன் பாணத்தை எய்தான், கங்கை வெளிப்பட்டது என்பது கிடையாது. இப்படி-இப்படி விஷயங்களைக் கேட்டு சொல்லி விடுகின்றனர், இங்கிருந்து கங்கை வெளிவந்தது என்று. கௌமுக் (பசுவின் வாய்) கூட

உருவாக்கியுள்ளனர். இப்போது குழந்தைகள் நீங்கள் பார்க்கிறீர்கள், உங்களுடைய நினைவுச் சின்னமும் நின்று கொண்டுள்ளது. அது ஜட தில்வாடா, இது சைதன்யமானது. அதில் மேலே வைகுண்டம் காட்டப்பட்டுள்ளது. கீழே தபஸ்யா செய்து கொண்டுள்ளனர். மேலே இராஜ்யத்தின் சித்திரம் உள்ளது. அதனால் மனிதர்கள் நினைக்கின்றனர் சொர்க்கம் மேலே உள்ளது என்று. பாம்ஸ் (வெடிகுண்டுகள்) தயார் செய்பவர்கள் தாமே புரிந்து கொண்டுள்ளனர், இது நமது விநாசத்திற்காகவே தான் என்று. சொல்கின்றனர், இதுபோல் செய்தால் விநாசமாகி விடும் என்று. எழுதப்பட்டும் உள்ளது, மகாபாரத யுத்தத்தில் இப்படி நடந்தது, அனைவரும் அழிந்து போயினர் என்று. சத்யுகத்தில் இருப்பதே ஒரு தர்மம் என்றால் நிச்சயமாக மற்ற அனைத்தும் அழிந்து போகும். இதையும் குழந்தைகள் அறிவார்கள், பக்தி செய்து-செய்தே கீழே இறங்கியே வந்துள்ளனர், டிராமா ப்ளான் படி. உண்மையில் இங்கே எந்த ஓர் ஆசீர்வாதத்தின் விஷயமும் கிடையாது. எது டிராமாவில் உருவாக்கப்பட்டுள்ளதோ, அது நடந்தே தீரும். கொஞ்சம் அப்படிப்பட்ட விஷயம் நடந்து விட்டால் மனிதர்கள் சொல்லி விடு கின்றனர், இது ஈஸ்வரனின் விருப்பம் என்று. நீங்கள் அதுபோல் சொல்ல மாட்டீர்கள். நீங்களோ, டிராமாவில் இது விதிக்கப்பட்டுள்ளது என்று சொல்வீர்கள். நீங்கள் ஈஸ்வரன் விதித்தது என்று சொல்ல மாட்டீர்கள். ஈஸ்வரனுக்கும் டிராமாவில் பாகம் உள்ளது. சிருஷ்டிச் சக்கரம் எப்படிச் சுற்றுகிறது என்பதையும் பாபா தான் சொல்லிப் புரிய வைக்க முடியும். ஞானம் நிறைந்தவராக இருப்பவரும் பாபா தான். மனிதர்கள் நினைக்கின்றனர், அவர் அனைவரின் மனதையும் அறிவார் என்று. ஆனால் நாம் என்ன செய்கிறோமோ, அதற்கான தண்டனையோ நிச்சயமாக நமக்குக் கிடைக்கும். பாபா உட்கார்ந்து தண்டனை தர மாட்டார். இது தானாகவே உருவாக்கப்பட்ட ஒரு நாடகமாகும். அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே உள்ளது. இதனுடைய முதல்-இடை-கடையினுடைய ரகசியத்தை பாபா தான் புரிய வைக்கிறார். நீங்கள் பிறகு மற்றவர்களுக்குப் புரிய வைக்கிறீர்கள். இப்போது பாபா சொல்கிறார், குழந்தைகளே, உங்களுடைய மன நிலை அவ்வாறு அப்படி இருக்க வேண்டும், கடைசியில் எதுவுமே நினைவில் வரக்கூடாது. தன்னை ஆத்மா என உணர வேண்டும் - இது தான் கர்மாதீத் அவஸ்தா எனச் சொல்லப்படும். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக்கண்டெடுக்கப் பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே!

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) (பாபாவிடமிருந்து) உதவி பெறுவதற்காக நன்றாக புருஷார்த்தம் செய்யுங்கள். ஆசிரியர் ஆகி மற்றவர்களுக்கு இராஜயோகம் கற்றுக் கொடுங்கள். கைடு (வழிகாட்டி) ஆகி அனைவருக்கும் வழி காட்டுகின்ற சேவை செய்யுங்கள்.

2) சர்வசக்திவான் பாபாவின் நினைவு மூலம் தனது பேட்டரியை சார்ஜ் செய்ய (புத்தியை நிரப்பிக் கொள்ள) வேண்டும். பாபாவுக்கு உறுதிமொழி கொடுத்தப் பிறகு ஒருபோதும் காமசிதையின் ஆசனத்தில் அமரக் கூடாது.

வரதானம் : சேவை உணர்வினால் நிரம்பியவர் ஆகி, ஒவ்வோர் ஆத்மாவுக்கும் பிராப்தியின் பலனை அனுபவம் செய்விக்கக் கூடிய உண்மையான சேவாதாரி ஆகுக.

யார் ஒவ்வோர் ஆத்மாவுக்காகவும் சதா சுப பாவனை, சிரேஷ்ட விருப்பம் வைக்கிறாரோ, அவர் தாம் உண்மையான சேவாதாரி ஆவார். அவர் வெறுமனே சொற்பொழிவாற்றுவது மட்டும் இல்லை. ஆனால் சேவை உணர்வு மூலம் அனைவருக்காகவும் குஷியின் பாவனை, சக்திகளின் பிராப்திக்கான பாவனை, ஊக்கம்-உற்சாகத்தை அதிகரிப்பதற்கான பாவனை வைத்து சகயோகத்தின் அனுபவம் செய்விப்பார். சேவை மூலம் அவர்களுக்குப் பிராப்திகளின் பலனை அனுபவம் செய்விப்பது தான் உண்மையான சேவை ஆகும். அத்தகைய சேவையில் தபஸ்யா நிறைந் திருக்கும்.

சுலோகன்: பபாவின் ஆசிர்வாதங்களைப் பெற வேண்டுமானால் அன்பானவராக, நல்ல குழந்தையாக, கட்டளைப்படி நடக்கும் குழந்தையாக ஆகுங்கள்.

அவ்யக்த அமைதி மூலம் டபுள் லைட் ஃபரிஸ்தா ஸ்திதியை அனுபவம் செய்யுங்கள்

எவ்வளவுக்கெவ்வளவு நீங்கள் உள்முகநோக்குள்ளவராக, இனிய அமைதி சொரூபத்தில் நிலைத்துக் கொண்டே செல்வீர்களோ, அவ்வளவு கண்களின் பாû‘, பாவனையின் பாû^ மற்றும் சங்கல்பங்களின் பாû^யை சகஜமாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த பாû‘ தான் ஆன்மிக யோகி வாழ்க்கையின் பாû^ ஆகும். உங்கள் அமைதி சக்தி, அறிவியலை விடவும் உயர்ந்ததாகும். எப்படி அறிவியல் பிரத்தியட்ச நிரூபணத்தைக் காட்டுகிறதோ, அது போல் அமைதி சக்தியின் நடைமுறை நிரூபணம் உங்களனைவரின் டபுள் லைட் ஃபரிஸ்தா வாழ்க்கை. எப்போது இந்த அனைத்து நடைமுறை நிரூபணங்களும் காணப்படுகிறதோ, அப்போது விரும்பாமலே கூட அனைவரின் பார்வையும் செல்லும் மற்றும் ஜெய ஜெய என்ற வெற்றி முழக்கத்தின் முரசு ஒலிக்கும்.